FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313282

1. District மாவட்டம் திருவள்ளூர் PS காவல்நிலையம் உணவுத் துறை மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகம் Year: 2026 ஆண்டு FIR No: 13/2026 முத.அ. எண் Date: 22.09.2026 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the P.C (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 15.09.2026 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு 19.24 hrs & Time from : நேரம் முதல் 19.36 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.09.2026 Time : நேரம் 07.15 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.09.2026 Time : நேரம் 07.45 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: நகராட்சி அலுவலகம், மாணாமதுரை நகராட்சி, திருவள்ளூர் மாவட்டம்.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி கிடைக்கவில்லை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. ஆனன் (b) Father's/ Husband's Name : அருணாசலம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 50/2026 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் & நிறுவனம் பராமரித்து வருகிறார் (g) Address : முகவரி 110, வடக்கு தெரு, ஆலங்காவனூர், பாம்பூர், திருமழிசை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பட்டுராஜா, நகராட்சி மொத்தியாளர், மாணாமதுரை நகராட்சி, திருவள்ளூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
மன உளைச்சலால், புகார் கொடுக்க முடிவு எடுக்க கால தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 22.09.2026 தேதி காலை 07.15 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது இராமநாதபுரம் மாவட்டம், பாம்பூர், மேலக்காவனூர், வடக்குத் தெரு, 110 என்ற முகவரியில் வசிக்கும் அருளாந்து என்பவரின் மகன் திரு.A.ஜான் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகராட்சி அலுவலகம், நகராட்சி பொறியாளர் திரு.பட்டுராஜா ஆகியோரை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.09.2026 at 08.20 hrs

Name: பெயர் A. JESUDOSS,
Rank: நிலை Inspector of Police, No.எண்
VAC, Sivagangai

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண். 13/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

22.09.2026-ம் தேதி காலை 07.45 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 13/2026 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர், A.ஜான், த/பெ.அருளாந்து, 110, வடக்கு தெரு, மேலக்காவனூர், பாம்பூர், இராமநாதபுரம் மாவட்டம், பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை, அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 3 ஆண்டுகளாக பரமக்குடியில் உள்ள IVR & Co என்ற நிறுவனத்தில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். அந்த நிறுவனத்தின் உரிமையாளரான திரு.வின்சென்ட் ராஜா எனக்கு சகோதரர் உறவுமுறை உறவினர் ஆவார். மேற்படி நிறுவனம் மூலம் நகராட்சி தொடர்பான ஒப்பந்த பணிகளை செய்து வருகிறோம். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் TURIP 2025-26 திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள நடைபெற்ற டெண்டரில் எங்களது IVR & Co நிறுவனம் கலந்துகொண்டு, மானாமதுரை நகராட்சி ஆணையாளர் அலுவலக 1) Roc.No.1774/2024/E1, நாள்:21.05.2025-ன்படி Package-06-ல் 108.00 லட்சம் மதிப்பிலான தார் சாலை பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவும், 2) Roc.No.1774/2024/E1, நாள்:21.05.2025-ன்படி Package-07-ல் 134.50 லட்சம் மதிப்பிலான தார் சாலை பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவும் மற்றும் 3) Roc.No.1774/2024/E1, நாள்:12.05.2025-ன்படி Package-09-ல் 164.00 லட்சம் மதிப்பிலான சிமெண்ட் சாலை பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவும் எங்களது நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்று, சுமார் 5 மாதங்களுக்கு முன்பு மேற்படி அனைத்து சாலை பணிகளும் செய்து முடிக்கப்பட்டது. மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகையில் 90% வாங்கியது போக, 10 சதவீதத் தொகை மொத்தம் சுமார் ரூ.40 லட்சம் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் கடந்த 15.09.2026ம் தேதி இரவு 07.24 மணியளவில் மானாமதுரை நகராட்சி பொறியாளர் திரு.பட்டுராஜா என்பவரது அலைபேசி எண்.9150375473-லிருந்து திரு.வின்சென்ட் ராஜாவின் அலைபேசி எண்.9444911116-ற்கு Whatsapp Call வந்தபோது, அவரால் whatsapp call-ஐ எடுக்க இயலவில்லை. அதன்பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 7.36 மணியளவில் திரு.வின்சென்ட் ராஜா மேற்படி நகராட்சி

பொறியாளர் திரு.பட்டுராஜாவை whatsapp call-ல் தொடர்புகொண்டபோது, அவர் திரு.வின்சென்ட் ராஜாவிடம், "உங்க ரோடு வேலைகளுக்கான balance பில் ரெடி பண்ணிக்கிட்டு இருக்கு, 3 வேலைகளுக்கும் மொத்த தொகையில் 2 சதவீதம் ரூ.8 லட்சம் கமிஷன் கொடுங்க" என்று கூறியுள்ளார். அதற்கு திரு.வின்சென்ட் ராஜா, ரோடு நல்லா போட்டிருக்கிறோம், சம்பளம் எல்லாம் கூடிப்போயிருச்சு, பெருசா ஒன்றும் லாபம் இல்லை என்று சொன்னதற்கு, அவர் வின்சென்ட் ராஜாவிடம், "சரி மொத்தத் தொகையில் 1 %, ரூ.4 லட்சம் கொடுங்க" என்று தெரிவித்துள்ளார். அதற்கு வின்சென்ட்ராஜா வேலைக்கே பணம் எல்லாம் செலவாகிடுச்சு, அவ்வளவு பணம் இல்ல சார் என்று தெரிவித்ததற்கு, நகராட்சி பொறியாளர் திரு.பட்டுராஜா, "ரூ.4 லட்சத்தில் முதலில் ரூ.2 லட்சத்தை நகராட்சி ஆபிஸ்க்கு வந்து என்னிடம் கொடுங்க, நான் உங்களுக்கு பேலன்ஸ் பில் சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு பண்றேன், பில் போட்டவுடன் மீதம் ரூ.2 லட்சத்தை வந்து கொடுத்திடுங்க" என்று கூறியுள்ளார், அதற்கு வின்சென்ட் ராஜா, இந்த வாரம் விநாயகர் சதுர்த்தி போய்ட்டு இருக்கு, அடுத்த வாரம் எங்க Supervisor ஜான் என்பவரை மானாமதுரை நகராட்சி ஆபிஸிற்கு நேரில் வந்து உங்களை பார்க்க சொல்கிறேன் என்று நகராட்சி பொறியாளர் திரு.பட்டுராஜாவிடம் கூறியுள்ளார். அதற்கு அவர், வின்சென்ட் ராஜாவிடம், "பணம் கொடுத்தால் தான் Completion Report-கள் ரெடி பண்ணி அனுப்பி, balance bill போடுவோம்" என்று கூறியுள்ளார். மேற்படி அனைத்து விபரத்தையும் வின்சென்ட்ராஜா என்னிடம் கூறி, மேலும், அவருக்கு உடல்நலம் சரியில்லாததனால், அலைச்சல் தாங்க முடியாது என்று சொல்லி, மானாமதுரை நகராட்சி பொறியாளர் திரு.பட்டுராஜா லஞ்சம் கேட்பது சம்மந்தமாக சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு, சிவகங்கை லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்க என்னிடம் அங்கீகார கடிதத்தையும், மானாமதுரை நகராட்சி பொறியாளர் திரு.பட்டுராஜா லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2 லட்சத்தையும் என்னிடம் கொடுத்துள்ளார். ஆகவே, எங்களது IVR & Co நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட 3 ஒப்பந்த சாலை பணிகளுக்கு நிலுவையில் உள்ள bill தொகையினை வழங்குவதற்கு மொத்த மதிப்பீட்டு தொகையில் 1 சதவீதம் ரூ.4 லட்சம் லஞ்சமாக கேட்டு, அதில் முதற்கட்டமாக ரூ.2 லட்சத்தை தருமாறு கேட்ட மானாமதுரை நகராட்சி பொறியாளர் திரு.பட்டுராஜா என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு மேற்கண்டவாறு, இப்படிக்கு sd/-xxxxx.

Sir, Received the complaint on 22.09.2026 at 07.15 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime.No.13/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 as amended by the P.C.(Amendment) Act 2018 on 22.09.2026 at 07.45 hrs and took up for investigation. sd.R.JESUDOSS, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

22/9/2026

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Sivagangai